திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசு கால்நடை மருத்துவமனை அல்ல. துணை சுகாதார நிலையத்திற்காகக் கட்டப்பட்ட சிறிய கட்டடம். அதிலே மருத்துவம் செய்கின்ற வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, அது சாலையோரமாக, பஸ் நிற்கின்ற இடத்திலே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அங்கே கால்நடைகளைப் பிடித்து வரும்பொழுது வாகனத்தைக் கண்டு அந்தக் கால்நடைகள் எல்லாம் மிரண்டுபோய் கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடுகிற சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய வீட்டின் அருகிலேயே இருக்கிறது. தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனவே, கருணை உள்ளத்தோடு, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே ஈவு இரக்கம் காட்டாமல், வாய் பேசாத கால்நடைகள் என்பதால், ஓரங்கட்டாமல், தயவு செய்து அந்த வாய் பேசாதக் கால்நடைகளை எண்ணத்திலேகொண்டு புதிய கட்டடத்தைக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதியை ஒதுக்கீடு செய்ய முன்வராததால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வரும் நிதியாண்டில் அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

210—

பள்ளி மற்றும் விடுதி

***1464—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 மே 6]

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை பகுதியில் அரசு ஆதி திராவிடர் நலத் துறை பள்ளி மற்றும் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படுவதில்லை. எனினும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை பகுதியில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் புதிய ஆரம்பப் பள்ளி தொடங்குவதற்கு மாநில தொடக்கக் கல்வித் திட்ட இயக்குநருக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் முன்மொழிவுகள் 26-3-2008 அன்று அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாண்டு சிங்காரப்பேட்டையில் புதிய ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஏறக்குறைய 30 ஆயிரம் ஆதி திராவிட மாணவர்கள் படிக்கின்ற மாவட்டம் ஆகும். 30 ஆயிரம் மாணவர்கள் படிக்கக்கூடிய இடத்திலே, ஒரேயொரு ஆதி திராவிட நலப் பள்ளி மட்டுமே உள்ளது என்பதை பேரவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாவட்டத்தில் ஏறக்குறைய ஊத்தங்கரை, மத்தூர், போச்சம்பள்ளி ஆகிய இப்பகுதிகளையெல்லாம் உள்ளடக்கிய பகுதியான தேன்கனிக்கோட்டை, ஓசூர், மற்றும் சூளகிரி ஆகிய இந்த ஒன்றியங்களில் ஒரேயொரு பள்ளி மட்டுமேயிருப்பதால், 420 ஆதி திராவிட குடும்பங்கள் உள்ள அந்தப் பகுதியிலே அரசானது சிங்காரப்பேட்டையிலே கூடுதலாக ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளி ஒன்றினை தொடங்கவேண்டுமென்ற கோரிக்கையினை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே விடுதியினை அளிப்பதற்கான இசைவினைத் தெரிவித்துக்கொண்டதற்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளி முன்மொழியப்பட்டுள்ளதை இந்த ஆண்டே, தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக தற்போது முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கான ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பகுதியில் ஆரம்பப் பள்ளி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10, 15 ஆண்டு காலமாக நிலுவையில் இருந்த கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டு கூடுதலாக ஒரு ஆதி திராவிடர் பள்ளி தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வந்திருப்பதை இந்த நேரத்திலே வரவேற்கிறேன். அதேபோல, நீதித் துறையின் சார்பாக நான் பேசும்போது மாநில மனித உரிமை ஆணையத்தின் சார்பாக அறிக்கை வைக்கவில்லையென்ற கோரிக்கையானது, இன்று சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டிருப்பதால், உண்மையிலேயே இந்த அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை ஆதி திராவிட மாணவர் விடுதி சுற்றுச் சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளது. ஆகவே, அந்த விடுதிக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச் சுவர் எழுப்புவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையில் விடுதிக்கு சுற்றுச் சுவர் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.*

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என இரண்டு பள்ளிகளிலும் சேர்த்து கிட்டத்தட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். அங்கு எந்த விடுதியுமே கிடையாது. எனவே, ஆதி திராவிடர் மாணவர் விடுதி, மாணவியர் விடுதி எனத் தனித்தனியாக விடுதிகள் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலூர்பேட்டை பேரூராட்சியில் மாணவர் விடுதியும், மாணவியர் விடுதியும் கேட்டிருகின்றார்கள். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, எந்த விடுதி முதலில் அமைக்கப்பட வேண்டுமோ அதற்கேற்ப அங்கே இந்த நிதியாண்டில் விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*